*27*

# பின்னாளைய அப்போஸ்தலிக்க வரலாறு

## I. பவுலின் பின்னாளைய வரலாறு.

***1. அவரது விடுதலை; அதைத் தொடர்ந்த வரலாறு.***—பவுல் தமது முதல் ரோமச் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்பது அதை அவர் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தமையினால் மறைமுகமாக உணர்த்தப் படுவதாகவும் (பிலி. 1:25, 26; 2:24; பிலே. 22) அவரது முந்திய வரலாற்றில் பொருந்தி வராத நிகழ்ச்சிகள் மற்றும் பயணங்களுக்கான மறைவான கருத்துக்களினால் உறுதிப்படுத்தப்படுவதாகவும் மற்றும் உலகளாவிய பாரம்பரியத்தினாலும் உள்ளது.

அவர் மீண்டும் எபேசுவுக்குச் சென்றார் என்பதையும், கிரேத்தாவுக்குப் பயணித்தார் என்பதையும், மற்றும் மக்கெதோனியாவுக்கும் கிரேக்கத் திற்கும் இன்னொரு பயணம் சென்றார் என்பதையும் நாம் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபங்களில் இருந்து பெறுகின்றோம். இந்த வேளையின் போது அவர் தீமோத்தேயுவுக்கு முதல் நிருபத்தையும் தீத்துவுக்கு நிருபத்தையும் எழுதினார்.

***2. அவருடைய கடைசிச் சிறையிருப்பும் இரத்த சாட்சியான மரணமும்.***—பவுல் கி.பி. 63ல் விடுவிக்கப்பட்டிருந்தார். அடுத்த ஆண்டில் ரோமாபுரியின் மாபெரும் தீ விபத்து நேர்ந்தது. பேரரசனாயிருந்த நீரோ தம் மீது (மக்கள்) சந்தேகம் கொள்வதைத் திசை திருப்புவதற்காக கிறிஸ்தவர்களைக் குற்றம்சாட்டி, பேரரசின் முதல் உபத்திரவத்தைத் தொடங்கினான். ரோமாபுரியிலிருந்து தொலைவில் இருந்த பவுல், சற்றுக் காலத்திற்குத் தமது ஊழியத்தை தொடர்ந்தார், ஆனால் கடைசியில் அவர் கைது செய்யப்பட்டு ரோமாபுரிக்குத் திரும்பக் கொண்டு வரப்பட்டார். அவர் சட்டத்திற்குப் புறம்பான தீ வைத்தலைத் தூண்டினார் என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கக் கூடும். அவரது இரண்டாம் சிறையிருப்பு முதல் சிறையிருப்பைக் காட்டிலும் மிகவும் கடுமையானதாக இருந்தது. அவர் சிறையிலிருந்து, முன்னதாகவே இரத்த சாட்சியாய் மரிக்கப் போகும் எதிர்பார்ப்பில் தமது கடைசி நிருபத்தை—2 தீமோத்தேயுவை - எழுதினார். தமது பழைய நண்பர்கள் இராது போனது, சிலர் அவரைக் கைவிட்டுச் சென்றது ஆகியவை அவரது இருதயத்தைப் பெரிதும் துன்புறச் செய்தன. லூக்கா கடைசி வரையிலும் அவருடன் இருந்தார். இரண்டாம் தீமோத்தேயு நிருபத்தின் கடைசி அதிகாரத்திலிருந்துதான் வயதான இந்த

அப்போஸ்தலர்மீது வேத வசனத்தின் மிகப் பிந்திய வெளிச்சம் வீழ்கின்றது; ஆனால் நம்பத் தகுந்த பாரம்பரியத்தின்படி, அவர் கி.பி. சுமார் 68ல் தீர்ப்பிடப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தார். கிறிஸ்தவர்கள் மீது மிகவும் அடிக்கடி திணிக்கப்பட்ட மரணத்திலிருந்து பவுலின் ரோமக்குடியுரிமை யானது அவரை தவிர்த்துத் தாமதிக்கப்படச் செய்தது. அவர் அநேகமாக ரோமாபுரியின் மதில்களுக்கு வெளியில்தான் சிரச் சேதம் செய்யப் பட்டிருப்பார். வருங்கால சந்ததிக்கு மனிதரால் ஒப்புவிக்கப்பட்டவை களிலேயே வளமிக்க பரம்பரைச் சொத்தாக உள்ள வாழ்வும் எழுத்துக்களும் உடைய (புறஜாதியாருக்கான) இந்த மாபெரும் அப்போஸ்தலர் இவ்வாறாக வீழ்ந்தார்.

## II. மற்ற அப்போஸ்தலர்களின் பின்னாளைய வரலாறு.

***1. பேதுருவைப் பற்றிய கடைசி கண்ணோட்டம்.***—பேதுரு, அப்போஸ்தலிக்க ஆலோசனைச் சங்கத்தில் இருந்தார் என்பதே (அப். 15:7-11) அவரைப் பற்றிய மிகப் பிந்திய குறிப்பாக உள்ளது. பவுல் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கலாத்தியருக்கு எழுதிய தம் நிருபத்தில், அந்தியோகியாவில் பேதுருவின் மாய்மாலத்தை(கலா. 2:9-14)க் குறிப்பிடுகின்றார். இந்த நிகழ்ச்சியானது அநேகமாக, ஆலோசனைக் கூட்டத்திற்குப் பின் விரைவிலேயே, மற்றும் பவுலின் இரண்டாம் ஊழியப் பயணத்திற்கு முற்பட்ட காலத்தில் நடைபெற்றிருந்திருக்கலாம். இது புதிய ஏற்பாட்டில் பேதுருவைப் பற்றிய கடைசியான வரலாற்று மறை குறிப்பாக உள்ளது. ஆனால் அவரது நிருபங்களில் இரண்டு(ம்) நமக்கு வந்துள்ளன. அவற்றுள் முதலாவது நிருபமானது, அநேகமாக பாபிலோன் என்ற உருவகச் சொற்றொடர் கொண்டிருந்த ரோமாபுரியில் இருந்து எழுதப்பட்டிருக்க லாம், மற்றும் இது ஆசியா மைனர் பகுதியில் இருந்த கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டது (1 பேது. 1:1; 5:13). இதில் சீலா மற்றும் மாற்கு ஆகியோரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதிலிருந்து, இது அநேகமாக பவுலின் முதல் மற்றும் இரண்டாம் ரோமச் சிறையிருப்புகளுக்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று நினைக்க இடமுண்டு. பேதுருவின் இரண்டாம் நிருபமானது இவருக்குப் பவுலின் நிருபத்தைப் பற்றிய (2 பேது. 3:15, 16) பழக்க அறிவு இருந்ததையும் இரத்த சாட்சியான மரணத்தைப் பேதுரு எதிர்பார்த்திருந்ததும் காண்பிக்கப்படுகின்றது (2 பேது. 1:13-15; இ.வ. யோவா. 21:18, 19). தொடக்க காலக் கிறிஸ்தவ எழுத்தாளர்களின் கூற்றுப்படி, அந்த எதிர்பார்ப்பு, ரோமாபுரியில் பவுலின் மரணத்திற்குப் பின் வெகு விரைவில் உய்த்துணரப்பட்டது. பேதுரு ரோமக் குடியுரிமையை மகிழ்வுடன் பெற்றிருந்ததில்லை, எனவே அவர் தமது எஜமானரைப் போன்று சிலுவையில் மரித்தார். பாரம்பரிய வரலாறு நம்பத் தக்கதென்றால், அவர் தம் எஜமானரைப் போலத் துன்புறத் தகுதியற்றவர் என்று எண்ணி, தம்மைத் தலை கீழாகச் சிலுவையில் அறையும்படி கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

***2. யோவானின் பின்னாளைய வாழ்வு.***—நடபடிகளின் வரலாற்றினுடைய மிகவும் முற்பகுதியிலேயே யோவான் விட்டு விடப்படுகின்றார். சமாரியாவில் பிலிப்புவின் ஊழியம் தொடர்பான விஷயத்தில் (அப். 8:14, 25) அவர் கடைசியாகக் குறிப்பிடப்படுகின்றார். நடபடிகளில் (அப்போஸ் தலர்களின்) ஆலோசனைக் கூட்டம் தொடர்பான விஷயத்தில் அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை (அப். 15); ஆனால் அது தொடர்பான விஷயத்தில் பவுல் அவரைக் குறிப்பிடுகின்றார் (கலா. 2:9). சுவிசேஷ ஊழியத்தில் யோவான் முக்கியத்துவம் வாய்ந்த நபராயிராதிருப்பினும், பவுலுக்கு அடுத்தபடியாக இவரது எழுத்துக்கள் வேறு எந்த அப்போஸ் தலரின் எழுத்துக்களைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன. கடைசி சுவிசேஷம், மூன்று நிருபங்கள் மற்றும் வெளிப் படுத்தின விசேஷம் ஆகிய புத்தகங்கள் இவரது எழுதுகோலில் இருந்து வந்தவைகளாய் உள்ளன. அவரது பிந்திய ஆண்டுகள் அநேகமாக, செயல் பாடுகளின் மையமாக எபேசுவைக் கொண்டிருந்து, ஆசியா மைனர் பகுதியில் கடந்து சென்றிருக்கலாம். அவர் ஓராண்டு காலத்திற்கு பத்மு தீவுக்கு (வெளி. 1:9) நாடு கடத்தப்பட்டிருந்தார், அங்கு அவர் வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார். அவர் ட்ரேஜனின் காலம் வரையிலும் வாழ்ந்திருந்தார் (கி.பி. 98-117), அவர் நூற்றாண்டின் முடிவில் மரித்தார், ஒருவேளை இவர் ஒருவர் மாத்திரமே தமது விசுவாசத்தைத் தமது இரத்தத்தினால் முத்திரையிடாத அப்போஸ்தலராயிருந்தார்.

***3. மற்ற அப்போஸ்தலர்கள்—முடிவுரை.***—நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி (அப். 12:1, 2) யோவானின் சகோதரனாயிருந்த யாக்கோபு தான் முதலில் இரத்த சாட்சியாக மரணம் அடைந்து வீழ்ந்தவராவார். மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றிப் புதிய ஏற்பாடு வேறு ஏதாவது எடுத்துரைக் கின்றதா என்பது சந்தேகமே. யாக்கோபு மற்றும் யூதா ஆகியோர் எழுதிய இரு நிருபங்கள் எஞ்சியுள்ளன. இதை எழுதியவர்கள் இயேசுவின் சகோதரர்களாய் இருக்கலாம் என்ற கருத்துக்கு அதிகமதிகமாய் ஆதரவு பெருகினாலும் இதை எழுதியவர்களை அடையாளப்படுத்துதல் என்பது தீர்த்து வைக்கப்படாத கேள்விகளில் ஒன்றாகவே உள்ளது. பாரம்பரிய வரலாறானது, வெவ்வேறு அப்போஸ்தலர்கள் வெவ்வேறு நாடுகளுக்கு சுவிசேஷப் பணி செய்ய சென்றதை தொடர்பு படுத்தி யோவான் தவிர மற்ற யாவரும் இரத்த சாட்சியாக மரணம் அடைந்ததை எடுத்துரைக்கின்றது.

எல்லாருடைய கடைசிப் பிரயாசங்கள் மீதும், அப்போஸ்தலர்களில் மாபெரும் நபர்களாய் விளங்கியவர்களின் கடைசிப் பிரயாசங்கள் மீதும் கூடக் கவிந்துள்ள தெளிவற்ற நிலையானது மிகவும் ஆழ்ந்து குறிப்பிடக் கூடியதாக உள்ளது. அப்போஸ்தலிக்க வரலாற்றில் தனி நபருக்கான கூறானது கீழான நிலையிலேயே உள்ளது. மனிதர்களைச் சுற்றி ஆர்வத்தின் ஒரு அளவு (மட்டுமே) ஒன்று கூடுகின்றது; ஆனால் மிக மேன்மையான ஆர்வம் என்பது எப்பொழுதும் விரிவடையும் வட்டாரங்களைக் கொண்ட ஊழியத்தையே மையங் கொண்டதாக உள்ளது. இதற்கு நேர்மாறாக சுவிசேஷ வரலாற்றில் தனிநபருக்கான கூறானது பலம் மிகுந்து நிற்கிறது. ஆர்வமானது ஒரு நபரில் மையங் கொண்டுள்ளது. கிறிஸ்து தாமே தமது

வசனம் மற்றும் தமது ஊழியம் எதனைக் காட்டிலும் எப்பொழுதும் பெரியவராயிருக்கின்றார். அவர் பூமியிலிருந்து சென்றது வரைக்கும் தெளிவற்ற நிலை என்று எதுவும் இருப்பதில்லை. அவர் சுவிசேஷங்களுக்கு மாத்திரமோ, அல்லது புதிய ஏற்பாட்டுக்கு மாத்திரமோ இல்லாது, வேதாகம வரலாறு முழுவதற்கும் முதன்மைக்குத் திறவுகோல் கல்லாக உள்ளார். அவரில்லையேல் இந்த முழுப்பின்னலும் நம்பிக்கையற்ற அழிவாக/ சிதிலமாக வீழ்ச்சியடையும்; அவர் இருக்கும் பொழுது, இது இணையற்ற நீடித்த அழகாக நிலைநிற்கின்றது.